00206

இலங்கை திறந்த பல்கலைக் கழகம்

மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடம்

சட்டத் திணைக்களம்

சட்டமாணி (சிறப்பு) பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டம் - மட்டம் 4

தொடர் மதிப்பீட்டுப் பரீட்சை II – 2022/2023

LLU4707 – குடும்பச் சட்டம்

நேரம் : 1 மணித்தியாலம்

---

திகதி: 04.12.2023 காலம்: மு.ப. 09.30 – மு.ப 10.30

---

மொத்த வினாக்களின் எண்ணிக்கை – 02

**ஒரு** வினாவிற்கு மட்டும் விடையளிக்க.

தெளிவற்ற கையெழுத்திற்கு பரீட்சாத்திகளுக்கு புள்ளிகள் குறைக்கப்படும்.

1. நிஹால் ஒரு பாடசாலை ஆசிரியர், அவர் தனது பெற்றோரான செலஸ்தினா மற்றும் சியாதொரிஸ் ஆகியோருடன் களுத்தறையில் வசிக்கிறார். நிஹால் 18 வயதை அடைந்ததும் அவர்களது ஒரே சொத்தும், வருமான மூலமுமாகிய ஒரு இறப்பர் தோட்டத்தினை நிஹாலுடைய பெற்றோர் நிஹாலுக்கு கொடையளித்தனர். நிஹால் தனது பெற்றோரை பராமரிப்பதற்காக இறப்பர் தோட்டத்தின் வருமானத்தைப் பயன்படுத்தினார். நிஹால் 2002 ஆம் ஆண்டு நுவனியை திருமணம் செய்ததுடன், அதே ஆண்டு கொழும்பிலுள்ள பாடசாலையொன்றுக்கு இடமாற்றம் பெற்றார். கொழும்பில் ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்து, அங்கு வசிக்கத் தொடங்கினார். ஒரு மகனும், ஒரு மகளுமென அவர்களுக்கு இரண்டு பிள்ளைகள் உள்ளனர். நுவனி வீட்டிலிருந்து பிள்ளைகளைக் கவனித்ததுடன், நிஹால் அவருடைய மாதாந்த சம்பளத்தினை குடும்பத்தைப் பராமரிப்பதற்கென பயன்படுத்தினார்.

   அண்மைக்காலமாக, மஹரகமவில் உள்ள ஒரு ஆசிரியையுடன் நிஹால் தொடர்பில் இருப்பதாக நுவனி கண்டுபிடித்தாள். இதனைப் பற்றி நிஹாலிடம் கேள்வி எழுப்பிய போது, நிஹால் அவளைத் தாக்கியதுடன் வீட்டை விட்டு வெளியேறினார். அவளுக்கு வீட்டு செலவுகளுக்கு நிஹால் பணம் கொடுப்பதை நிறுத்தியதுடன், மாத வாடகையையும் செலுத்த மறுத்தார். நுவனி வேறு எந்தவித வருவாயினையும் கொண்டிருக்கவில்லை என்பதுடன், தனக்கும் முறையே 20 மற்றும் 17 வயதை உடைய தனது பிள்ளைகளுக்கும்

ஆதரவளிக்க முடியாதவராக இருந்தார். குறித்த ஆசிரியையுடனான தொடர்பினை கைவிடக் கூறியமையின் நிமிர்த்தமாக தனது பெற்றோரையும் நிஹால் கவனிப்பதை நிறுத்து விட்டார்.

இலங்கையில் பராமரிப்புத் தொடர்பாக ஆளும் சட்டவிதிகளுக்கமைவாக, தனது மனைவி, பிளளைகள் மற்றும் பெற்றோருக்கு பராமரிப்பை வழங்குவதற்கான நிஹாலின் பொறுப்புடைமையினை ஆராய்க. பொருத்தமான இடங்களில் நியதிச்சட்டப் பிரிவுகள், உரோமன் டச்சு சட்டக் கோட்பாடுகள் மற்றும் தீர்ப்புச் சட்டங்களினால் உமது விடையினை ஆதாரப்படுத்துக.

(20 புள்ளிகள்)

2. கீழே தரப்பட்டுள்ள ஏதாவது **நான்கு** வழக்குகளின் மீது வழக்குக் குறிப்பு எழுதுக. ஒவ்வொரு வழக்குக் குறிப்பிலும் தீர்ப்புக்களில் ஆராயப்பட்ட மற்றைய முக்கிய வழக்குகளின் விவாதமும் உள்ளடக்கப்பட்டிருக்க வேண்டும்.

   *I. Jayasinghe Vs. Kiribindu (1997) 2 S.L.R 1*

   *II. Abeysundere Vs. Abeysundere (1998) 1 S.L.R 185*

   *III. Manickckavasagar Vs. Kandaswami (1986) 2 S.L.R 8*

   *IV. Wimalawathie Vs. Openayake (1971) 74 N.L.R 308*

   *V. Wijegunawardene Vs. Gracia Catherine (1984) 2 S.L.R 381*

(5 x 4 =20 புள்ளிகள்)

*பதிப்புரிமைப் பெற்றது..*